**சார்பு நீதிமன்றம், போளூர்**
**முன்னிலை– திரு. S.செந்தில்பாபு, எம்.ஏ.எம்.எல்.,**
**சார்பு நீதிபதி, போளூர்,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**O.S.No:92/2025**
**CNR No.TNTM22-000226-2025**

பாலசுந்தரம் … வாதி

//எதிர்//

சேட்டு ...பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.Y.P.கணேசன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பன்னீர்செல்வம் அவர்கள் ஆஜராகயும், இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்…

**தீர்ப்புரை**

வாதியிடம், பிரதிவாதி வழக்குச் சொத்துக்களை ஈடுகாட்டி 25.04.2011 அன்று ரூ.2,00,000/– பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு 24% வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமானப் பத்திரத்தின் பேரில் தற்போது செலுத்தவேண்டிய வழக்கு தொகை ரூ.3,03,100/– மற்றும் அதற்கு பின் வட்டியும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை கோரியும், தவறும்பட்சத்தில் அடமானச் சொத்துக்களை பொறுப்பாக்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. **வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்**

வாதியிடம் பிரதிவாதி 25.04.2011 தேதியில் ரூ.2,00,000/–ம் ரொக்கமாக பெற்றுக்கொண்டு அசல் ரூ.100/–க்கு மாதம் 1–க்கு ரூ.2.00 வீதம் கூடும் வட்டியும் அசலும் வேண்டும்போது கொடுப்பதாக ஒப்புக்கொண்டு சரியான பிரதிபலனக்கு, வழக்கு சொத்துக்களை ஈடுகாண்பித்து ஒரு பதிவு செய்யப்பட்ட அடமான கடன்

பத்திரத்தை சாட்சிகள் முன்னிலையில் வாதி பெயருக்கு பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி வாதி பலமுறை நேரில் கேட்டும் பிரதிவாதி கடனை பைசல் செய்யாமல் காலம் கடத்தி வந்ததால் வாதி இந்த வழக்கை வழக்கு தொகை ரூ.3,03,100/—க்கு பின் வட்டி ஆண்டுக்கு 9% தொகைக்கும், சொத்தின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்.

3. <u>பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>

வாதி தாவாவில் கண்டுள்ள சங்கதிகளில் இப்பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வாதியிடம் இந்த பிரதிவாதி தனது சொத்துகளை ஈடுகாண்பித்து ரூ.2,00,000/—த்தை கடனாக பெற்றுக்கொண்டு அடமான கடன் பத்திரம் எழுதி கொடுத்தார். பின்னர் இப்பிரதிவாதி வாதியிடம் மாதந்தோறும் வட்டித்தொகை ரூ.6,000/— வீதம் 18 மாதங்கள் கட்டி வந்தார். அந்த தொகையை தாவாவில் கழிக்காமல் வாதி தாவா தொகையை கணக்கிட்டுள்ளார். எனவே தாவா தொகையில் ரூ.1,08,000/—த்தை கழித்து தீர்ப்பாவதில் இப்பிரதிவாதிக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

4. <u>இவ்வழக்கில் வனையப்பட்டுள்ள எழுவினாக்கள் கீழ்கண்டவாறு</u>

| | |
|---|---|
| 1. | Whether the Plaintiff is entitled for the relief of Recovery of Money due on the suit Mortgage deed as prayed for ? |
| 2. | To what other relief the Plaintiff is entitled for ? |

5. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி திரு.பாலசுந்தரம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் யாரும் விசாரிக்கப்படவில்லை ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

<u>எழுவினா 1 க்கான தீர்வு</u>

6. வாதி தரப்பு வழக்கு என்னவென்றால் வாதியிடம் பிரதிவாதி 25.04.2011 தேதியில் ரூ.2,00,000/—ம் ரொக்கமாக பெற்றுக்கொண்டு அசல் ரூ.100/—க்கு மாதம் 1—க்கு ரூ.2.00 வீதம் கூடும் வட்டியும் அசலும் வேண்டும்போது கொடுப்பதாக ஒப்புக்கொண்டு

சரியான பிரதிபலனக்கு, வழக்கு சொத்துக்களை ஈடுகாண்பித்து ஒரு பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பத்திரத்தை சாட்சிகள் முன்னிலையில் வாதி பெயருக்கு பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றும், மேற்படி வாதி பலமுறை நேரில் கேட்டும் பிரதிவாதி கடனை பைசல் செய்யாமல் காலம் கடத்தி வந்ததால் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. பிரதிவாதி தரப்பு வழக்கு என்னவென்றால், வாதியிடம் இந்த பிரதிவாதி அடமான கடன் பத்திரத்தின் பேரில் ரூ.2,00,000/-த்தை கடனாக பெற்றுக்கொண்டு அடமான கடன் பத்திரம் மாதந்தோறும் வட்டித்தொகை ரூ.6,000/- வீதம் 18 மாதங்கள் கட்டி வந்ததாகவும், அந்த தொகையை தாவாவில் கழிக்காமல் வாதி தாவா தொகையை கணக்கிட்டுள்ளார் என்றும் தாவா தொகையில் அவர் செலுத்திய வட்டித்தொகையை கழித்து தீர்ப்பாவதில் இப்பிரதிவாதிக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்பதே ஆகும்.

8. இருதரப்பு வாதுரையையும், வழக்கு ஆவணங்களையும் கவனமாக பரிசீலிக்கையில், வாதி இவ்வழக்கில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது முதன்மை சாட்சியத்தின் போது பிரதிவாதி தன்னிடம் பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பத்திரத்தின் பேரில் ரூ.2,00,000/-த்தை 25.04.2011ல் கடன் பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி தொகைக்கு ஆண்டுக்கு 24% வட்டி கொடுப்பதாக ஒப்புக் கொண்டதாகவும் சாட்சியம் அளித்து அந்த சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக வாதிக்குப் பிரதிவாதி 25.04.2011ல் ரூ.2,00,000/- என கண்டு எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வா.சா.ஆ.1யை பரிசீலிக்கையில் வாதியின் கூற்று உண்மை என தெரியவருகிறது. அத்துடன் பிரதிவாதியும் தான் வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்ததை மறுக்க வில்லை. ஆனால் வாதியிடம் இந்த பிரதிவாதி அடமான கடன் பத்திரத்தின் பேரில் பெற்ற ரூ.2,00,000/-த்திற்கு மாதந்தோறும் வட்டித்தொகை ரூ.6,000/- வீதம் 18 மாதங்கள் கட்டி வந்ததாகவும், அந்த தொகையை தாவாவில் கழிக்காமல் வாதி தாவா

தொகையை கணக்கிட்டுள்ளார் என்றும் தாவா தொகையில் அவர் செலுத்திய வட்டித்தொகையை கழித்து தீர்ப்பாவதில் இப்பிரதிவாதிக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்று மட்டுமே வாதிட்டுள்ளார்.

9. மேற்கண்ட வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீக்கையில், வாதி தனது தரப்பு வழக்கை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101 ன் கீழ் நிரூபிக்க வேண்டியது வாதித் தரப்பு கடமையாகும். மேற்படி வாதித் தரப்பு வழக்கு வாதியால் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆராய்ந்ததில் இவ்வழக்கில் வாதிக்கு பிரதிவாதி 25.04.2011 ல் ரூ.2,00,000/– என கண்டு எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தின் அசல் தாக்கல் செய்துள்ளது மட்டுமின்றி பிரதிவாதி தான் கடன் பெற்றததை ஒப்புக்கொண்டுள்ள நிலையில் வாதி தகுந்த சான்று மற்றும் சாண்றாவணங்களின் மூலம் முதல் நிலையில் இவ்வழக்கை நிரூபித்துள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. பிரதிவாதி தனது எதிர் வழக்குரையில் வாதியிடம் தான் ரூ.2,00,000/– கடன் பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்ததை ஒப்புக்கொண்டபோதும், வாதியிடம் மேற்கண்ட அடமான கடன் தொகைக்கு மாதந்தோறும் வட்டித்தொகை ரூ.6,000/– வீதம் 18 மாதங்கள் கட்டி வந்ததாகவும், அந்த தொகையை தாவாவில் கழிக்காமல் வாதி தாவா தொகையை கணக்கிட்டுள்ளார் என தெரிவித்துள்ளார். ஆனால் மேற்கண்ட தனது கூற்றை நிரூபிப்பதற்கு நம்பதகுந்த சாட்சியமோ அல்லது சான்றாவணங்கள் எதையும் பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 முறையான நடைமுறையில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்ற நிலையிலும், அதில் உள்ள தனது கையெழுத்தை மறுக்காத நிலையிலும், பிரதிவாதியனவர் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றவாணங்கள் மூலம் தனது தரப்பை நிரூபிக்க கடமைப்பட்டவராகிறார். ஆனால் பிரதிவாதியின் மேற்கண்ட கூற்றை நிரூபிப்பதற்கான எவ்வித நம்பத்தகுந்த சாட்சியங்கள் எதையும் நீதிமன்றத்தில் முன்நிறுத்தவில்லை. அத்துடன் வாதி தனது குறுக்கு விசாரணையின்போது

**"நான் 25.04.2011 வருடம் கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கை 2017 ம் வருடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்."....**

**....."பிரதிவாதியிடம் ரூ.1,08,000/− பெற்றதற்கு அவரிடம் ரசீது எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.."....**

என தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட சாட்சியத்தை பரிசீலிக்கையில் பிரதிவாதி வாதியிடம் இருந்து ரூ.1,08,000/-த்திற்கு ரசீது பெற்றதாக கேள்வி எழுப்பப்பட்ட நிலையில் பிரதிவாதி அந்த ரசீதை இவ்வழக்கில் தனது தரப்பில் ஆதாரமாக தாக்கல் செய்யவில்லை. எனவே, பிரதிவாதி தான் பெற்ற ரூ.2,00,000/-த்திற்கான கடன் தொகைக்கு எவ்வித வட்டியும் செலுத்தவில்லை என்ற வாதியின் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

11. பிரதிவாதி வா.சா.ஆ.1 கடன் தொகை பெற்றுக்கொண்டதை ஒப்புக்கொண்டு வட்டி செலுத்தியதாக தெரிவித்திருந்தாலும், அவர் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாணங்கள் மூலம் மேற்கண்ட தனது கூற்றை நிரூபிக்காததால் அவர் வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளார் என்ற வாதி தரப்பு கூற்றை மறுப்பதற்கில்லை. மேலும் வா.சா.1 சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 யை பரிசீலிக்கையில் பிரதிவாதி வாதியிடம் ரூ.2,00,000/−தை கடனாக பெற்றுக்கொண்டு அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, 25.04.2011 ம் தேதியிட்ட பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரமானது உரிய பிரதிபலனுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என இந்த நீதிமன்றம் முடிவுக்கு வந்துள்ளது. இந்நிலையில், வா.சா.ஆ.1 தாவா அடமான கடன் பத்திரத்தில் கண்டுள்ளவாறு ரூ.2,00,000/−ஐ கடனாக பெற்றுக்கொண்டு அந்த கடனுக்காக வரவு எதுவுமில்லை என வலுவான ஆதாரத்தைப் பிரதிவாதி தரப்பில் பொய்ப்பிக்கும் வகையில் எந்தவிதமான ஆதாரத்தையும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே, இவ்வழக்கில் வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பத்திரத்தின் மூலம் ரூ.2,00,000/− பெற்றுக்கொண்டதற்கான வலுவான ஆதாரம் இருக்கும் நிலையில், மேற்கண்ட அடமான கடன் பத்திரத்திற்காக 18 மாதங்கள் வட்டி செலுத்தியதாக வாய்மொழியாக பிரதிவாதி தரப்பில் கூறியதை ஏற்றுக்கொள்ளும்

வகையில் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்கண்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின்படி அடமான கடன் பத்திரத்தின் பேரில் ரூ.2,00,000/–த்தை வாதி சாட்சிகளின் முன்னிலையில் ரொக்கமாக கொடுத்துள்ளார் என்றும், மேற்படி ரூ.2,00,000/–த்திற்கு பிரதிவாதி எவ்வித அசலோ வட்டித்தொகையோ செலுத்தவில்லை என்ற சங்கதி வாதியால் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, வாதியிடமிருந்து பிரதிவாதி பெற்ற அடமானக் கடன் பேரிலான தாவாத்தொகை ரூ.3,03,100/– னை பின்வட்டியுடன் பிரதிவாதியிடமிருந்து பெற முதல்நிலை தீர்ப்பாணை பெற வாதி அறுகதை உள்ளவர் என்றும், அதனால் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா 1 க்கு இந்நீதிமன்றம் விடையளிக்கிறது.

12. <u>எழுவினா 2 க்கான தீர்வு</u>

தவா அடமான கடன் பத்திரத்தின் பேரில் ரொக்கமாக ரூ.2,00,000/–யை வாதி பிரதிவாதிக்கு கொடுத்துள்ளார் என்றும், தாவா அடமானம் சரியான பிரதிபலனுக்கு ஏற்பட்ட ஒன்று என்றும், வாதியிடமிருந்து பிரதிவாதி பெற்ற அடமானக் கடன் பேரிலான தாவாத்தொகை ரூ.3,03,100/–னை பின்வட்டியுடன் பிரதிவாதியிடமிருந்து பெற முதல்நிலை தீர்ப்பாணை பெற வாதி அறுகதை உள்ளவர் என்றும், அதனால் வாதிக்கு வழக்கில் கோரியுள்ளபடி பரிகாரம் கிடைக்கதக்கதென எழுவினா 1 க்கும் தீர்வு கண்டுள்ளநிலையில், வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து அவ்வாறே இவ்வெழுவினாவிற்கு விடையளிக்கிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. வாதிக்கு பிரதிவாதி வழக்கு தொகை ரூ.3,03,100/–ம் அசல் தொகை ரூ.2,00,000/–க்கு வழக்கு தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 9 சதவீத வட்டியும் பின்னிட்டு தொகை வசூலாகும் நாள் வரை 6% பின்வட்டிடயும், வழக்கு செலவுத்தொகையும் 3 மாத கல அவகாசத்திற்குள் கொடுக்கவேண்டும் என்றும் பிரதிவாதி முதல்நிலை தீர்ப்பாணை தேதியிலிருந்து 3

மாத காலத்திற்குள் தீர்ப்பாணை தொகையை செலுத்த தவறும்பட்சத்தில், வாதி இறுதிநிலை தீர்ப்பாணைக்காண மனு செய்யலாம் எனவும் தீர்ப்புரை பகரப்படுகிறது. பிரதிவாதி வாதியின் செலவுத்தொகையை செலுத்தவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாளன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SENTHILBABU
Digitally signed by S SENTHILBABU
Date: 2026.03.13 16:33:41 +0530

**சார்பு நீதிபதி,**
**போளூர்.**

**<u>வாதி தரப்பு சாட்சி:</u> –**

வா.சா.1– திரு. பாலசுந்தரம்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u> –**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.04.2011 | அடமான கடன் பத்திரம் அசல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி</u>** – இல்லை

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** – இல்லை

S SENTHILBABU
Digitally signed by S SENTHILBABU
Date: 2026.03.13 16:33:51 +0530

**சார்பு நீதிபதி,**
**போளூர்.**